பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி23 வெள்ளிக்கிழமை 07.03.2025 கதிர் 119

## ரணில் நாடாளுமன்றம் வருவதே மிகச் சிறந்தது

### நாமலின் கருத்து

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டுமா இல்லையா என்பதை அவரது கட்சியே தீர்மானிக்கவேண்டும். எவ்வாறிருப்பினும் அவரைப் போன்ற சிரேஷ்ட உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதே சிறந்தது என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும்நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

பொது ஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பெண் அமைப்பாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம்கொள்கையைஅடிப்படையாகக் கொண்ட அரசியலில் ஈடுபடுகின்றோம். மாறாக வேறு சில கட்சிகளைப் போன்று நாம் அராஜகமாக அச்சுறுத்தி அரச அதிகாரத்தைப் ☞ 8

கனேமுல்ல சஞ்சீவவின்

## கொலை வழக்கு விசாரணை ஸ்கைப் மூலம் நடத்தப்படும்

கனேமுல்ல சஞ்சீவ படுகொலை சம்பவம் தொடர்பாகவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 9 சந்தேகநபர்கள் தொடர்பான வழக்கை நேற்று ஸ்கைப் தொழில்நுட்பம் மூலம் அழைப்பதற்குதேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டுள்ளார்.

குறித்த உத்தரவை தலைமை நீதிபதி நீதிமன்றத்தின்பதிவாளருக்கு பிறப்பித்துள்ளார். அதற்கமைய, நீதிமன்றப் பதிவகம் இதுதொடர்பில் ☞ 2

## ஊடக தொழிற்றுறை மேம்பாட்டில் கவனம்

### ஆளும்தரப்பு அறிவிப்பு

ஊடகத்துறை மற்றும் ஊடகவியலாளர்களின் தொழிற்றுறை மேம்பாட்டுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2023/ 2024 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நடத்தப்படவிருந்தஜனாதிபதி ஊடகவிருந்துவழங்கல்விழா வெகுவிரைவில்நடத்தப்படும். ஊடகவியலாளர்களின் நலன்கருதி 100 ☞ 8

## விவசாய முன்னேற்றத்திற்கு உதவுவதில் கனடா விருப்பம்

இலங்கையின் விவசாயத் துறையின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்க கனடா விருப்பம் தெரிவித்துள்ளது.

கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் மற்றும் விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

காலநிலைமாற்றத்தைஎதிர்கொள்ளும் ☞ 8

## இது ரகசியம் அல்ல!

அல்ஜெசீரா தொலைக்காட்சியின் தலைக்குத் தலை (Head to Head) நிகழ்ச்சியில் ரணிலை நேர்கண்டது ஒரு மிகத் தரமான சம்பவம். ”வச்சு செய்தல்” என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம். முடிந்தால் அந்தக் காட்சியை இலங்கை அரசியலில் அக்கறை கொண்ட ஆங்கிலம் தெரிந்தவர்கள் அனைவரும் பார்த்து ரசிக்கவேண்டும்.

நெறியாளரைப் பார்த்து ”நீ பிறப்பதற்கு முன்பே, நான் ☞ 2

## குடல் புற்றுநோய் பாதிப்பு அதிகரிப்பு

வயோதிபர்கள் மற்றும் குழந்தைகளிடையேபெருங்குடல்மற்றும்மலக்குடல் புற்றுநோய் பாதிப்பு அதிகரித்து வருவதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டம் தெரிவித்துள்ளது.

இதற்கு மோசமான பழக்கவழக்கங்களும், சுறுசுறுப்பானவாழ்க்கைமுறை இல்லாமையும்முக்கியக்காரணங்களாகும் என்று தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஸ்ரீனி அழகப்பெரும, சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில்நடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

நாம் 10 ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தோம் என்றால், இலங்கையிலும் உலகிலும்பெருங்குடல் மற்றும் மலக்குடல் புற்றுநோய்க்கானதரவுமிகவும்குறைவாக இருந்தது. ஆனால்இப்போதுஅதுஉலகிலும் இலங்கையிலும் மூன்றாவது இடத்தை எட்டியுள்ளது. மேலும் பெருங்குடல் மற்றும் மலக்குடல் புற்றுநோயைத் தடுக்க வழிகள் உள்ளன.

இதற்கு முக்கிய காரணம் நமது மோசமான உணவுப் பழக்கமும், ☞ 2

## மருத்துவமனைகள் மீது விமானக் குண்டு வீச்சு

# மக்களுக்கான மனிதாபிமான உதவி இறுதிப்போரின்போது தடுக்கப்பட்டது

### பகிரங்க ஒப்புதல் வாக்குமூலம் தந்தார் ரணில்

**இறுதிப் போரில் சிக்குண்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் தடுக்கப்பட்டன என்பதைஏற்றுக்கொள்கின்றேன்மருத்துவமனைகள் மீது ஆட்டிலறி எறிகணைத் தாக்குதல்கள் நிகழ்த்தப்படவில்லை. விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் என்று கேட்டீர்களானால், ஆம், இடம்பெற்றன, அதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன். எனினும், இது பெருமளவிலானது அல்ல என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ’அல்ஜசீரா’ தொலைக்காட்சியின்லண்டன்கலையகத்தில் இடம்பெற்ற‘தலைக்குத்தலை’ (Head** ☞ 2



## மேர்வின் உட்பட மூன்று பேருக்கு விளக்கமறியல்

முன்னாள்அமைச்சர்மேர்வின்சில்வா உள்ளிட்ட மூவரை மார்ச் 17 ஆம் திகதி வரைவிளக்கமறியலில்வைக்குமாறுமஹர நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா புதன்கிழமை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால்கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்குக் கிடைக்கப்பெற்றமுறைப்பாட்டுக்குஅமைய நடத்தப்பட்ட விசாரணைகளின் பின்னர் அவர் புதனிரவு கைது செய்யப்பட்டார்.

கிரிபத்கொட பகுதியில் உள்ள அரச காணியொன்றைத்தனியார்நபர்களுக்குப் போலி ஆவணங்களுடன் விற்பனை செய்த குற்றச்சாட்டில் குறித்த கைது இடம்பெற்றுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

## போதைப் பொருள் ஒழிப்புக்கான விசேட மத்திய நிலையம் வடக்கில்

### நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்கிறார் அமைச்சர்

வடக்கில் ஹெரோயின் போதைப்பொருள் பாவனை குறைவு, ஏனைய போதைப்பொருள் பாவனை உயர்வடைந்துள்ளது. எனவே போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் விசேட மத்தியநிலையத்தை வடக்கில் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மாலை ☞ 2

## ஆளும்தரப்புக்கு ஹர்ஷ எச்சரிக்கை

அயல் நாடான இந்தியா உட்பட பல நாடுகள் மீதான வரி சமநிலைப்படுத்தல் குறித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் அறிவிப்பைத் தொடர்ந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷா டி சில்வா ஆளும்தரப்புக்கு வலியுறுத்தியுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் செய்துள்ள பதிவில் அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.

இந்தியா மீதான டொனால்ட் டிரம்பின் வரிசமநிலைப்படுத்தல் ☞ 8

சீருடையோடு வந்து உங்களுக்கு

## ஆதரவு தந்த தாதியர் சம்பளத்தை குறைப்பதுதான் நன்றிக்கடனா?

### எதிர்க் கட்சித் தலைவர் ஆளும்தரப்பிடம் கேள்வி

வைத்தியசாலைகளில்காணப்படும் வெற்றிடங்களுக்கு வைத்தியர்களை இணைத்துக்கொள்வதுடன் அவர்களை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளவதற்கும் ஆளும்தரப்பு நடவடிக்கைஎடுக்கவேண்டும். ☞ 8

## நிகழ்நிலை காப்புச் சட்டத்தை உடன் இடைநிறுத்தவேண்டும்

ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் முடக்குவதற்காகவே கடந்த ஆளும்தரப்பு நிகழ்நிலை காப்புச் சட்டத்தை கொண்டுவந்தது. இந்தசட்டத்தை திருத்தம்செய்வதாகஆளும்தரப்பு குறிப்பிடுகிறது. அனைத்து தரப்பினரது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களைப் பெற்று திருத்தம் கொண்டுவரும் வரை நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் செயற்படுத்தலை இடைநிறுத்த வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சுகாதாரத்துறை மற்றும் ஊடகத்துறை அமைச்சு மீதான குழுநிலைவிவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆளும்தரப்பில் ☞ 8

## இனி இது .....

அரசியலுக்கு வந்தவன்'' என்று ரணில் வீர முழக்கம் இட்டாலும், கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் ஆரம்பப் பாடசாலை மாணவனைப்போன்றுகைகளைமார்புக்குக் குறுக்கே கட்டிக்கொண்டு ''நான் சொல்ல மாட்டேன், நான் சொல்லமாட்டேன்'' என்று அவர் அடம் பிடித்ததைப் பார்த்து ரசிக்கக் கண் கோடி வேண்டும்.

ஒரு கேள்வியைக் கேட்டால் அதை விடுத்து ''துட்டுக்கு ரெண்டு கொட்டைப் பாக்கு'' தனமாக பதில் சொல்லும் தனது வித்துவத்தை ரணில் அங்கும் காட்ட முற்பட்டபோது, தொடக்கத்திலேயே அதற்கு இடமளிக்க மறுத்துவிட்டார் நெறியாளர். கேட்ட கேள்விக்கு உன்னால் நேரடியாகப் பதிலளிக்க முடியாது என்றால் அடுத்த கேள்விக்குப் போய்விடலாம் என்பது அவரது அணுகுமுறையாக இருந்தது. ஒரு கட்டத்தில் அவர் நேரடியாகவே ரணிலிடம் சொன்னார், ''இது உன் அரசியல் பரப்புரைக்கான களம்'' அல்லவென்று.

தன்னுடைய ''பிரம்மாஸ்திரமான'' நேரடிக் கேள்வியைத் தவிர்த்துவிட்டு சளாப்பல் பதிலைத் தரும் வழிமுறை சரிவராது என்று தெரிந்தபோது, தான் நேர்காணலில் இருந்து எழுந்து போய்விடுவேன் என்று மிரட்டிப் பார்த்தார் ரணில், ஆனால் அதுவும் நெறியாளிடம் எடுபடவில்லை. ''பரவாயில்லை நேர்காணல் தொடங்கி ஐந்தே நிமிடங்களில் நீங்கள் புறப்படுவதாக இருந்தால் சரிதான்'' என்று போகிற போக்கில் சொல்லிவிட்டு, அடுத்த கேள்விக்கு நகர்ந்தார் நெறியாளர்.

தன்னுடைய நரித்தந்திரம் எதுவும் சரிவரவில்லை என்பது புரிந்ததும் திணறிப்போன ரணில், மிரண்டுபோன பாடசாலைச் சிறுவன் மாதிரி உடல் மொழிகளை வெளிப்படுத்தத் தொடங்கினார். பதில் சொல்லமாட்டேன் என்று அடம்பிடித்தார். ''நீதான் நான் விரும்பும் பதிலைச் சொல்ல விடுகிறாய் இல்லையே, பிறகெதற்கு நான் உனக்குப் பதில் சொல்லவேண்டும்'' என்று பிகு பண்ணினார். ''நீ விரும்பும் பதிலையே நான் சொல்லவேண்டும் என்று விரும்புகிறாய்'' என்று நெறியாளரைப் பார்த்துச் சத்தமிட்டார். அவரோ இவருடைய எந்தவொரு தந்திரத்திற்கும் இடமளிப்பதாக இல்லை.

போதாக்குறைக்கு அந்த நேர்காணல் அரங்கு முழுவதும் நிறைந்திருந்த பார்வையாளர்களோ ரணிலின் பொட்டுக் கேடுகளை எல்லாம் ஆதாரபூர்வமாக இடித்துக் காட்டுவதில் வல்லவர்களாக இருந்தார்கள். நிகழ்ச்சியில் ஜூரர்களாவும் மூவர் இருந்தனர். அவர்களில் ஒருவர் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவரும் ரணிலின் சகபாடியுமானவர். பாவம் அவர் சக்கரவியூகத்திற்குள் மாட்டிக்கொண்ட ரணிலை மீட்கப் பாடாதபாடுபட்டார். ஆனால் முயற்சிகள் எல்லாம் தோல்வியில் முடிந்தன.

உதாரணத்திற்கு, அவர் நெறியாளரைப் பார்த்து ''நீங்கள் பொருத்தமற்ற நபரிடம் இந்தக் கேள்விகளைக் கேட்கிறீர்கள். இவற்றை ராஜபக்சவிடம்தான் கேட்கவேண்டும். ராஜபக்ச இவரை (ரணிலை) அழித்து ஒழித்து நொருக்கிய மனிதர்'' என்று ரணிலைக் காப்பாற்றப் பார்த்தார். அதை தனது 'லெஃப்ட் கான்டினால்' கையாண்ட நெறியாளரோ, ''ஆமாம் ராஜபக்சவின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் இவரை (ரணிலை) அவருடன் அந்நியோன்னியமாகப் பார்த்திருக்கிறேன்'' என்று அசால்ட்டாகப் பதிலளித்து ரணிலின் சகாவின் --மூக்கை உடைத்துவிட்டார்.

நிகழ்ச்சி லண்டனில் நடந்ததால் அங்குள்ள ஈழத் தமிழர் ஆதரவு அரசியல் குழுக்களைச் சேர்ந்த பலரும் அதில் கலந்துகொண்டி-ருந்தனர். அவர்கள் ரணிலை விடாமல் துரத்தித் துரத்தி அவரது தோல்விகள், தவறுகள், இயலாமைகள் என்று பலவற்றையும் இழுத்து வெளியே போட்டு அம்பலப்படுத்தும் கேள்விகளை அவர் முன் வைத்தனர். 1983 முதல் 2024 வரையான காலப்பகுதி ரணிலின் அரசியல் குறித்த இந்தக் கேள்விகள் அவரைத் துளைத்தன. என்ன செய்வதென்று திணறிய நிலையில் இரண்டு விடயங்களுக்கு ஒப்புதல் வாக்குமூலம் வழங்கினார் ரணில், 1983இல் நடந்த இனக் கலவரம் தவறுதான், அதனை நியாயப்படுத்த மாட்டேன், அதற்குப் பொறுப்பு நாங்கள்தான்'' என்றார். ஆனாலும் அதுவும் ஒரு போர்க் குற்றம்தானே என்று நெறியாளர் கேட்டபோது இல்லை என்று மறுத்துவிட்டார்.

பல நாடுகளில் இனக்கலவரங்கள் இடம்பெற்றதைப் போன்றே இலங்கையிலும் இடம்பெற்றன என்றார். இலங்கையில் இனப் பிரச்சினை இருக்கின்றது என்பதையும் அவர் பகிரங்கமாக ஒத்துக்கொண்டார். கடந்த சில வருடங்களாக இலங்கையில் இருப்பது பொருளாதாரப் பிரச்சினையே என்ற வகையில் கருத்துச் சொல்லி வந்த அவரால் அந்தக் கருத்தை இந்த நேர்காணில் சொல்ல முடியவில்லை. இனப்பிரச்சினை இருக்கிறது என்று ஒத்துக்கொண்டார். ஏனெனில் தொடக்கத்திலேயே பலமான ஆட்டிலறிகள் அவர் மீது ஏவப்பட்டதால் அவர் குழம்பிப் போயிருந்தார்.

அதேபோன்றுதான் இறுதிப் போரின் போது பிரச்சினைகள் இருந்தன என்பதையும் மருத்துவமனைகள் மீது விமானக் குண்டு வீச்சுக்கள் நடத்தப்பட்டன என்பதையும் இறுதிப் போரின்போது மனிதாபிமான உதவிகள் தடுக்கப்பட்டன என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார்.

இந்த நேர்காணிலில் ரணில் மீதான முக்கிய ஏவுகணை ஆயுதமாக இருந்தது, இலங்கையின் இறுதிப் போரின்போது கொழும்பு அரசு பயன்படுத்திய உத்திகளான சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறுவது, மனிதாபிமானச் சட்டங்களை மீறுவது, மனிதாபிமான உதவிகளைத் தடுப்பது ஆகியவற்றுக்கு உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் தண்டனைகள், நீதி வழங்கப்படாத காரணத்தால் இன்று பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் அதனைப் பயன்படுத்துகின்றது. ஆக, இன்றைய இஸ்ரேலிய போர்க் குற்றங்களுக்கு இலங்கையே முன்னுதாரம் என்பதாக இருந்தது. அதன் மறுதலையைப் பார்த்தால், இஸ்ரேல் போர்க் குற்றங்களில் ஈடுபட்டது என்பதை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உறுதிப்படுத்தியிருக்கின்றது. எனவே இலங்கையும் அதே குற்றங்களைச் செய்தது என்பதுதானே அர்த்தம். ரணில் சர்வதேச அரங்கொன்றில் அதனைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டார்.

இலங்கையின் குள்ளநரி ஒன்றை பல 'ஹைனாக்கள்' சேர்ந்து களத்தில் வீழ்த்திய காட்சியாக இதனைப் பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மக்களுக்கான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

to Head) நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

'2009ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட்டுவிட்டதா?' - என்று நெறியாளல் மெஹ்டி ஹசன் கேள்வி எழுப்பினார். அவரது கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு ரணில் மறுத்தார். பின்னர் பார்வையாளர்கள் வரிசையில் இருந்து ஒருவர் எழுப்பிய இதேபோன்ற கேள்விக்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, எந்தச் சமூகத்துக்கும், தமிழர்களாக இருந்தாலும் இதுவரை நீதி வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

''விமானப் படை விமானங்கள் மருத்துவமனைகள் மீது குண்டுவீசிய தருணங்கள் உள்ளன. இதற்காகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், இந்தத் தாக்குதல் பெருமளவில் இடம்பெற்றது என்று நான் சொல்லமாட்டேன்'' - என்றும் ரணில் கூறினார்.

குறுக்கிட்ட மெஹ்டி ஹசன் ''ஐக்கிய நாடுகளின் குழு இலங்கைப் படையினர் போரில் சிக்குண்டவர்களுக்கான மனிதாபிமான உதவிகளைத் தடுத்தனர் என்று குறிப்பிட்டுள்ளனரே?'' - என்று கேள்வி எழுப்பினார்.

''நான் அது இடம்பெற்றது என நினைக்கின்றேன்'' ''இறு-திப் போரின்போது பிரச்சினைகள் இருந்தன. அதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அங்கு விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன. ஆட்டிலறி குண்டுகளும் வீழ்ந்திருக்கலாம். அப்படிப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோதும் எம்மால் தலையிட முடிந்துள்ளது'' என்று ரணில் தெரிவித்தார்.

கேள்வி: - நாடாளுமன்றம் உங்களை இலங்கையின் ஜனாதிபதியாக நியமித்தது. நீங்கள் பொருளாதாரத்தை ஸ்திரத்தன்மைக்குக் கொண்டு வந்தீர்கள். ஒரு வருடத்தில் நாட்டின் பணவீக்கத்தில் 70% ஐ 1.3% ஆகக் குறைத்தீர்கள். ஆனால் கடந்த செப்டம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் தோற்கடிக்கப்பட்டீர்கள். இவ்வளவு நல்ல சாதனையைப் பெற்றிருந்தும், இலங்கை மக்களால் நீங்கள் முழுமையாக நிராகரிக்கப்பட்டதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: - நான் ஏன் தோற்றேன் என்பதை விளக்க நான் இங்கு வரவில்லை. ஆனால் எனக்கு வழங்கப்பட்ட பணியை நிறைவேற்ற முடிந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

கேள்வி: - 2022இல் ஆட்சிக்கு வந்த சில மணி நேரங்களுக்குள், நீங்கள் பாதுகாப்புப் படையினரை அழைத்து, சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்க என்ன வேண்டுமானாலும் செய்யுமாறு அறிவுறுத்தினீர்கள், இல்லையா? பின்னர் அவர்கள் போராட்டக்காரர்களை வன்முறையைக் கொண்டு அடக்கினார்கள்தானே?

பதில்:- இளைஞர்களின் கருத்துக்களை யாரும் புறக்கணிக்கவில்லை. நாடாளுமன்றம் என்னை ஜனாதிபதியாக நியமிக்கும்போது, நான் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும். நாடாளுமன்றம் கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்டால் என்ன நடக்கும்? அதுதான் ஜனநாயகமா?

கேள்வி: -சர்வதேச மன்னிப்புச் சபை (அம்னஸ்டி இன்டர்நேஷனல்) கூற்றுப்படி, உங்கள் அலுவலகத்திற்கு முன்னால் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் 944 கண்ணீர் புகை குண்டுகளைப் பயன்படுத்தியது?

பதில்: மன்னிப்புச் சபை எமது நாட்டின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துகிறது. ஏனென்றால் அவர்களுக்கு வெவ்வேறு கருத்துக்கள் உள்ளன.

கேள்வி: - அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிராக தேவையற்ற பலப்பிரயோகம் நடந்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் கூறுகிறது?

பதில்: ஐரோப்பிய ஒன்றியம் சில அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது. என்னையும் இராஜினாமா செய்ய வற்புறுத்தினர். பின்னர் இலங்கையைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுவித்ததற்காக அவர்கள்தான் என்னைப் பாராட்டவும் செய்தார்கள்.

கேள்வி:- உங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் பிடிக்கவில்லை. சர்வதேச மன்னிப்புச் சபையும் பிடிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் எதிராக உள்ளீர்கள்...

பதில்: - இல்லை. எனக்கு ஐரோப்பிய ஒன்றியம் பிடிக்கும். நிறுவனங்களைப் பற்றி நீங்கள் சொல்லவேண்டிய அனைத்தையும் சொல்லுங்கள். அடுத்து பதில் சொல்கிறேன். நீங்கள் பிறப்பதற்கு முன்பிருந்தே நான் அரசியலில் இருக்கிறேன்.

கேள்வி: - கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பேராயர் மெல்கம் ரஞ்சித், ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து உண்மையான விசாரணை நடத்த நீங்கள் முயற்சிக்கவில்லை என்றும். அதற்காக நீங்கள் நியமித்த ஆணைக்குழு பயனற்ற அறிக்கையை வெளியிட்டதாகக் குறிப்பிடுகிறார்.

பதில்:- கத்தோலிக்க திருச்சபையில் அரசியல் இருப்பது எனக்குத் தெரியும்.

## குடல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுறுசுறுப்பான வாழ்க்கை முறை இல்லாததும் ஆகும். அத்துடன் வயோதிபர்கள் ஆவது. வயதுதான் நோய்க்குக் காரணம் என்பதல்ல. வயதுக்கு ஏற்ப ஆபத்து காரணிகளின் குவிப்பு அதிகரிப்பதால், இந்த நோய் வயதானவர்களுக்கு அதிகளவில் ஏற்படுகிறது.

இலங்கையில் மட்டும், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,500 ஆண்களும் 1,500 பெண்களும் இந்த நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்' என்றார்.

## போதைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் ஒழிப்புக்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.கடந்த காலங்களில் அரசியல்வாதிகளுக்கும், போதைப்பொருள் வியாபாரிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. வரலாற்றில் முதல்தடவையாக போதைப்பொருள் வர்த்தகர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையிலான தொடர்ந்து முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

போதைப்பொருள் ஒழிப்புக்குரிய நடவடிக்கைகளை நிறுவன மட்டத்தில் முன்னெடுத்துள்ளோம். கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்புக்களில் வடக்கில் மாத்திரம் கடந்த செவ்வாய்க்கிழமை 174 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்குவதற்காக 14 விசேட மையங்களை ஸ்தாபி பிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் வைத்தியசாலைகளில் போதைப்பொருள் தொடர்பில் தமிழ்மொழியில் விழிப்புணர்வுகள் வழங்கப்படும்.

2025.01.01முதல் 2025.03.01வரையான காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் 168 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு, 279 கிராம் ஹெரோயின், 2,140 கிராம் கேரள கஞ்சா, 423 கிராம் ஐஸ் போதைப்பொருள், 4,1048 போதைப்பொருள் குழிசைகள் கைப்பற்றபட்டன.

அதேபோல் யாழ்ப்பாணத்தில் 104 கிராம் ஐஸ், 650 கிராம் கேரள கஞ்சா, 2,6915 போதைப்பொருள் குழிசைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. வடக்கில் ஹெரோயின் போதைப்பொருள் பாவனை குறைவான போக்கில் இருப்பதை காண முடிகிறது. இருப்பினும் ஏனைய போதைப்பொருள் பாவனை உயர்வடைந்துள்ளது.

வடக்கில் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் விசேட மத்திய நிலையத்தை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைள் எடுக்கப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் ஆணைக்கு அமைவாக போதைப்பொருள் பாவனையை முழுமையாக இல்லாதொழிப்போம் என்றார்.

## கொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறை அதிகாரிகளுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அறிவித்துள்ளது.

மேற்படி, சந்தேகநபர்களை நீதிமன்றத்திற்கு அழைத்து வரும்போது ஏற்படக்கூடிய பாதுகாப்பின்மையைக் கருத்தில் கொண்டு நீதவான் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆதரவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய மக்கள் சக்தியின் கூட்டங்களுக்கு உத்தியோகபூர்வ ஆடையில் வந்து ஆதரவளித்த தாதியர்களுக்கு கொடுப்பனவுகளை குறைப்பதுதான் ஆளும்தரப்புக் காட்டும் நன்றிக் கடனா என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெகுசன ஊடக அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சுகாதாரத் துறையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்றே அந்தத் துறையில் உள்ள நிபுணர்களைத் தக்க வைத்துகொள்வதும் முக்கியமாகும். இதில் பாரதூரமான பிரச்சினைகள் காணப்படுகின்றன. அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கருத்துப்படி, அனைத்து வகையான வைத்தியர்களுக்குமான மேலதிக நேர கடமைக்கான கொடுப்பனவு 1/80 இல் இருந்து 1/120 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

விடுமுறை தினம் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்வதற்கான கொடுப்பனவு 1/20 இல் இருந்து 1/30 ஆக குறைக்கப்பட்டுள்ளது. வைத்தியர்களின் காத்திருப்பு கொடுப்பனவு மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு, வாகன உரிம பத்திர சிக்கல்கள், பயிற்சியாளர்களின் கொடுப்பனவுகள், பட்டப்பின் படிப்புக் கற்கைகளைத் தொடருவோருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் போன்றன இற்றைப்படுத்தப்படாமையால் ஏராளமானோர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

மேலும் சில வைத்தியர்கள் வெளிநாடுகளில் மருத்துவ சேவைக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்து வெளிநாடு செல்ல தயாராகி வருகின்றனர். தாதியர் சேவையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளில் கடுமையான சிக்கல்கள் காணப்படுகின்றன. பொது விடுமுறை மற்றும் வார ஓய்வு நாட்களுக்கான கொடுப்பனவு அடிப்படை சம்பளத்தில் 1/20 இல் இருந்து 1/30 ஆக குறைக்கப்பட்டுள்ளன. ஒரு மணிநேர சேவைக்கான கொடுப்பனவு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கான மருத்துவ ஆளணியை விரைந்து நிரப்புக!

## கூட்டாக கோரிக்கை வைத்த றஜீவன்,சிறீதரன் எம்.பிக்கள்

இவ்வருட இறுதிக்குள் வடக்கில் காணப்படுகின்ற வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணர்களின் வெற்றிடங்களை முடிந்த அளவு நிரப்பப்படும் எனவும் அத்துடன் சில வைத்தியசாலைகளின் தேவை கருதி அதற்கான புதிய நிரந்தர ஆளணி உருவாக்கப்பட்டு அதற்கான ஆளணியும் வழங்கப்படும் என சுகாதார அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

வியாழக்கிழமை நாடாளுமன்றத்தின் சுகாதாரத்துறை அமைச்சின் ஆலோசனைக் குழு கூட்டம் இடம்பெற்ற போது நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே சுகாதார அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நீண்ட காலமாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் நோயாளர்கள் அங்கு எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றஉறுப்பினர்றஜீவன்ஜெயச்சந்திரமூர்த்தி சுட்டிக்காட்டி இருந்தார், அத்துடன் மேலும் பல வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணருக்கான ஆளணி வெற்றிடங்கள் இருந்த போதும் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை என கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்திருந்த சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ இந்த வருட இறுதிக்குள் இப் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படும் எனத் தெரிவித்தார் .

மேலும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய நிபுணர்களுக்கான ஆளணியை உருவாக்கும் வரைக்கும் தற்காலிகமாக ஒரு வைத்திய நிபுணரை நியமிப்பதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன சம்மதம் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அங்கு கேள்வி எழுப்புகையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்திற்குள் அமைந்துள்ள சிறப்பு மகளிர் சிகிச்சை நிலையத்திற்கு இதுவரை மருத்துவநிபுணர்கள், மருத்துவர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் என எவையும் நிரப்பப்படாது இயங்குநிலை அற்ற நிலை காணப்படுவதாகவும், அங்குள்ள பெறுமதி வாய்ந்த மருத்துவ உபகரணங்கள் தென்பகுதி மருத்துவமனைகளுக்கு எடுத்து செல்லப்படுவதாக செய்திகள் வெளியாகிஉள்ளனஎனசுட்டிக்காட்டி இருந்தார் .

அதற்கு பதிலளித்த வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சமன் பத்திரன அவ்வாறு எந்த பொருள்களும் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படவில்லை என்றும் இரண்டு மாதங்களில் ஆளணி திரட்டப்பட்டு மகளிருக்கான சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

இருந்த போதிலும் சிறப்பு மகளிர் சிகிச்சை நிலையத்தின் மருத்துவ உபகரணங்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றுவது தொடர்பில் விவாதிக்கப்பட்டிருந்த போதிலும் சிறீதரன் மற்றும் அர்ச்சுனா எம்.பி ஆகியோர் கடும் ஆட்சேபணை தெரிவித்ததன் காரணமாக அவ்விடயம் கைவிடப்பட்டது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு அரச மருந்தாக்கற்கூட்டுத்தாபனத்தின்மருந்தகம்(விற்பனை நிலையம்)ஒன்று திறக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்,

அதற்கு மருந்தாக்கற் கூட்டுத் தாபனத்தின் பணிப்பாளர் பதிலளிக்கும் போது அங்கு திறப்பதற்கு இட வசதி இல்லை எனத் தெரிவித்த போது அதற்கு ஆட்சேபனை தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நொண்டிச்சாட்டுக்களை காரணங்களாக கூற வேண்டாம் , கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் தேவையான இடவசதி இருப்பதாகவும் அவ்வாறு அங்கு இடவசதி இல்லையெனில் இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்திற்குரிய வளாகத்தில் மருந்தகம் கட்டுவதற்கு நான் அனுமதி பெற்று தருகிறேன் எனத் தெரிவித்திருந்தார்.

அதன் அடிப்படையில் கிளிநொச்சியில் அரச மருந்து விற்பனை நிலையம் ஒன்றை திறப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டது.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இக்குழுக் கூட்டத்தில் சுகாதார அமைச்சர், பிரதி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் கலந்திருந்தனர்.113

# மாணவர்களுக்கு தளபாடங்கள் அன்பளிப்பு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியில் உள்ள முள்ளிப்பொத்தானை மைமூனா பெண்கள் அரபுக் கல்லூரி மாணவிகளுக்கான கட்டில் மெத்தை அன்பளிப்பு நிகழ்வு கல்லூரி ஸ்தாபகர் மற்றும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா முள்ளிப்பொத்தானை கல்வி குழு உறுப்பினர் முஸ்லிம் விவாக பதிவாளர் மௌலவி எம்.ஆர். முஜிபுர் ரஹ்மான் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அனுசரணை அல் - ஹிக்மதுல் உம்மா நிறுவனம் வேண்டுகோளுக்கு இணங்க உதவும் நிறுவனம் உதவும் நிறுவனம் கட்டில் மெத்தை அன்பளிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது. இதில் அப் பகுதியே சேர்ந்த முக்கியஸ்தர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தென்கிழக்கு பல்கலை உபவேந்தர் பதவிக்காக ஒன்பது பேர் களத்தில்

(நூருல் ஹுதா உமர்)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பணியாற்றிய பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் முதலாவது மூன்றாண்டு பதவிக்காலம் கடந்த 2024.08.08 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில் புதிய உபவேந்தர் ஒருவர் நியமிக்கப்படாது பதில் உபவேந்தராக கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் நியமிக்கப்பட்டிருந்தார்.

தற்போதைய புதிய ஆட்சியின் கீழ் குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் விண்ணப்பங்களுக்கான அழைப்பை கடந்த பெப்ரவரி 06 ஆம் திகதி விடுத்திருந்தார். அதற்கமைய மார்ச் 06 ஆம் திகதி, 3.00 மணி வரை ஒன்பது பேர் விண்ணப்பித்திருந்தனர்.

அதன் அடிப்படையில், கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எம்.ஐ.எஸ். சபீனா, பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன், பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். முஸாதிக், பேராசிரியர் ஏ.ஜௌபர் மற்றும் கலாநிதி யூ.எல். செயினுடீன் உள்ளிட்ட ஒன்பது பேர் விண்ணப்பித்துள்ளனர்.

புதிய உபவேந்தர், பல்கலைக்கழக பேரவையின் விசேட ஒன்றுகூடல் ஒன்றின் ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03ஃ2023 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப்பதாரிகளுக்கு ஏழு அளவுகோல்களின் கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரை தெரிவு செய்வர். குறித்த மூவரில் ஒருவரை ஜனாதிபதி உபவேந்தராக நியமிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மூதூர் இறால் பாலம் உடைந்து விழும் நிலை

## மக்கள் அச்சத்தில்

(மஜிப்ரான்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கட்டைப்பரிச்சான் கணேசபுர பகுதிகளை இணைக்கும் பாலமே இந்த இறால் பாலமாகும். மூதூர் பிரதேசத்தில் பல இடங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டாலும் கூட செய்ய வேண்டிய சில பகுதிகள் இன்னும் அப்படியே இருக்கின்றது.

இறால் பாலம் மிக நீண்ட கால மாக சேதம் அடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த பாலத்தினூடாக பல பிரதேசங்களை சேர்ந்த மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக இப்பாலத்தின் ஊடாக கடந்து செல்வதுடன், இப் பிரதேச மக்கள் அடிப்படை வாழ்வாதார பொருளாதார நடவடிக்கைகளை இப் பாலத்தின் ஊடாக செய்து வருகிறார்கள் .

மற்றும் பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், விவசாயிகள் மற்றும் அரச ஊழியர்கள், நோயாளிகள் எனப் பலர் இப் பாலத்தின் ஊடாக சிரமத்துக்கு மத்தியில் சென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது .

எனவே உரிய அதிகாரிகள் இதனை கவனத்தில் கொண்டு இப்பாலாத்தினை மக்களின் நலன் கருதி நிவர்த்தி செய்து தர வேண்டும் என்பது பொதுமக்களின் வேண்டுகோள் ஆகும்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எண்ணெய்க் குதங்களும் எதிர்காலமும்

1930களில்திருகோணமலையில்கட்டப்பட்டஅட்மிரால்டிஎண்ணெய்குதங்களின் பண்ணை குறித்து கடந்த 15 ஆண்டுகளில் பேசாத ஆளும்தரப்பே இல்லை எனலாம். எல்லா ஆட்சியாளர்களும் பதவிக்கு வந்ததும் இந்த எண்ணெய்க் குதங்களை முன்வைத்து ஏதாவது ஒரு திட்டத்தை அறிவிக்கிறார்கள். அதிலிருந்து வருமானம் கொட்டப் போகின்றது என்று கூறுகின்றார்கள். ஆனால் எதுவும் நடப்பதாக இல்லை. இப்போது தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பும் இந்தக் குதங்களை முன்வைத்து ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது. இந்தக் குதங்கள் தேசியப் பெருமை, அவமானம், பல அரசியல் நடவடிக்கைகளுக்கும் ஆதாரமாக இருந்து வருகிறது.

நீண்ட காலமாக இந்தக் குதங்களோடு இந்தியா தொடர்புபடுத்தப்படுகின்றது. திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தோடு இணைந்து அமைந்துள்ள இந்தக் குதங்களின் பயன்பாடு இலங்கையோடு மட்டுமல்லாமல் இந்தியத் துணைக்கண்டத்தின் பாதுகாப்போடும் தொடர்புபட்டதாகக் காட்டப்படுகின்றது. இதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கின்றது என்பதற்கு அப்பால் திருகோணமலை துறைமுகமும் இந்தக் குதங்களும் இரு நாடுகளுக்கும் இடையிலான உணர்வுபூர்வ விடயமாகவே காட்டி நகர்த்தப்படுகின்றன.

இந்தக் குதங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க இந்தியா விரும்புகின்றது. இதைமட்டுமல்ல திருகோணமலை உட்பட கிழக்கு மாகாணம் முழுவதையுமே தன்னுடைய பாதுகாப்பைக் காட்டி கையகப்படுத்துவதிலும் சீனா உள்ளிட்ட வேறு சக்திகள் அதற்குள் நுழையாமல் இருப்பதிலும் இந்தியா அக்கறை காட்டி வருகின்றது என்பது வெளிப்படை. தமிழ் அரசியல்வாதிகளையும் இந்தியா இந்த நோக்கத்திறாகவே கடந்த ஒன்றரைத் தசாப்தங்களாகப் பயன்படுத்தி வருகின்றது.

இந்திய – –இலங்கை ஒப்பந்தம் மற்றும் எண்ணெக் குதங்கள் குறித்த இந்திய எரிபொருள் கூட்டுத் தாபனமான ஐஓசியுடனான ஒப்பந்தம் என்பவற்றால் கடந்த காலங்களில்இந்தப்பகுதிக்குள்மற்றையமுதலீட்டாளர்கள்நுழையாமல்வைத்திருக்க முடிந்துள்ளது. இது மூலோபாய வடிவமைப்புகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அணுகுமுறையாக இருக்கலாம்.

ஆனால், இந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் (NPP) ஆட்சியாளர்கள், திருகோணமலை எண்ணெய்க் குதங்களின் வளாகத்தில் உள்ள 24 குதங்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆளும்தரப்பின் கூற்றுப்படி, இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் (CPC) இந்த எண்ணெய் குதங்களின் மேம்பாட்டை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்ட மூன்று ஆண்டு திட்டத்தை மேற்பார்வையிடும். இந்தத் திட்டத்தில் சாத்தியக்கூறு ஆய்வு நடத்துவதும் தேவையான பணிகளை மேற்கொள்வதும் அடங்கும்.

இதனோடு தொடர்புடைய தரப்பினரிடமிருந்து இந்தத் திட்டத்திற்கு ஏற்கனவே ஒப்புதல்கள் பெறப்பட்டுள்ளன என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ கூறினார். மேலும், இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் நிதியுடன் இந்தத் திட்டத்தை செயல்படுத்த எரிசக்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்று இந்தக் குதங்கள் குறித்து இதற்கு முன்னரும் பல ஆளும்தரப்புக்களும் பேசியும் திட்டங்களை அறிவித்தும் இருந்தும் அவை எவையும் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், இந்தத் திட்டத்திற்கு என்ன நடக்கும் என்பதை அறிய மூன்று ஆண்டுகள் காத்திருக்கவேண்டும். இதற்கு முன்பு பல ஆளும்தரப்புக்கள் எடுத்த இதேபோன்ற முடிவுகள், மோசமான திட்டமிடல், முதலீட்டின்மை, தொழிற்சங்கங்கள் அல்லது சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் எதிர்ப்பு என்பவற்றால் தோல்வி கண்டிருக்கின்றன. உள் அழுத்தம் அல்லது வெளிப்புற அழுத்தங்களும் இதற்குக் காரணமாக இருந்துள்ளன.

இந்த முறை நிலைமை வித்தியாசமாக இருக்கும் என்பதற்கான நம்பிக்கையை எங்கிருந்து பெறுவது என்பதைக் காலம்தான் காட்டவேண்டும். இந்தக் குதங்கள் இந்தியாவிற்கு முழுமையாக வழங்கப்படுவதை கடந்த காலங்களில் ஜேவிபி எதிர்த்துள்ளது. அதன் தீவிரமான 'இந்திய எதிர்ப்பு விரிவாக்க' நிலைப்பாடு காரணமாக இது நிகழ்ந்தது, இப்போது அதே ஜேவிபிதான் ஆட்சியின் முதுகெலும்பு. அதுமட்டுமல்ல கிழக்கு மாகாணத்தை இந்திய உதவியோடு அபிவிருத்தி செய்யப் போவதாகவும் அது அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் (LIOC), திருகோணமலை எண்ணெய் குதங்களை மேலும் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வழிவகைகள் இருப்பதாகத் தெரிவித்திருந்தது. திருகோணமலையை ஒரு பிராந்திய எரிசக்தி மையமாக மாற்றுவதற்கான அப்போதைய ஆளும்தரப்பின் லட்சியம் குறித்த கேள்விக்கு பதிலளித்த லங்கா இந்திய ஒயில் நிறுவன நிர்வாக இயக்குனர் மனோஜ் குப்தா, தயாரிக்கப்பட்டு வரும் சாத்தியக்கூறு அறிக்கையின் பரிந்துரைகளைப் பொறுத்து, தமது வசதிகளை அதிகரிக்க புதிய பெரிய கொள்ளளவு குதங்களைப் பயன்படுத்தக்கூடிய இடத்தை நிறுவனம் அடையாளம் கண்டுள்ளதாகக் கூறியிருந்தார். எனவே இந்தத் திட்டம் தொடரப்பட்டு இப்போது ஆளும்தரப்பால் புதுப்பிக்கப்படும் குதங்களும் இந்தியாவிற்கே வழங்கப்படுமா என்பது தெளிவில்லை.

24 தொட்டிகளும் புதுப்பிக்கப்பட்டு, தேவையான குழாய்/பம்பிங்/கட்டுப்பாடு மற்றும் தீயணைப்பு உள்கட்டமைப்பு நவீனமயமாக்கப்பட்டு, செயல்பாட்டு நிலைக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டால், அது இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பிற்கு மிகவும் வரவேற்கத்தக்க ஊக்கமாக இருக்கும். புதுப்பிக்கப்படும் தொட்டிகளில் ஆளும்தரப்பு எந்தெந்த பொருட்களைச் சேமிக்க திட்டமிட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரியவில்லை. இது இலங்கை இந்தியா இடையிலான பரஸ்பர எரிபொருள் ஒத்துழைப்பின் விரிவாக்கமாகவும் இருக்கலாம். அது தெளிவில்லை. இந்திய – இலங்கை எரிபொருள் இணைப்பு தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்தியப் பிரதமர் மோடி இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக குழாய் வழியாக இரு நாடுகளுக்கும் இடையில் எரிபொருள் பரிமாற்றத் திட்டம் இருந்தது.


தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்தில் உள்ள காவிரிப் படுகையில் உள்ள இந்தியன் ஒயில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான புதிய சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து இலங்கைக்கு பெட்ரோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை இந்தத் திட்டம் மூலம் வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. திருகோணமலையை ஒரு 'எரிசக்தி மையமாக' மாற்ற உதவும் வகையில் இந்தக் குழாய்த் திட்ட பாதை வடிவமைக்கப்பட்டிருந்தது.

இப்போது இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டு திருகோணமலை எண்ணய்க் குதங்கள்பயன்பாட்டுக்குவருமா இல்லை வேறு சர்வதேச நாடுகளுடன் இணைந்து இந்தக் குதங்கள் அபிவிருத்தி செய்யப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.

# மீனவர்களுக்காக வீட்டுத் திட்டங்களுடன் கூடிய எரிபொருள் மானியங்களையும் வழங்க வேண்டும்

## தமிழ் அரசு கட்சியின் திருமலை நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் கோரிக்கை

(ஹஸ்பர்)



மீனவர்களுக்காக வீட்டுத் திட்டங்களுடன் கூடிய எரிபொருள்மானியங்களையும் வழங்க வேண்டும் என தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

நான் பிரதிநிதித்துவ படுத்தும் திருகோணமலை மாவட்டமானது 141 கி.மீ நீளமுள்ள கடற்கரையை கொண்டுள்ளது. திருகோணமலை மாவட்டம் அமைந்துள்ள கிழக்கு மாகாணம் ஆனது 431 கி.மீ நீளமுள்ள கடற்கரையை கொண்டதாகும். கிழக்கில் மீன்பிடித் தொழிலும் அது சார்ந்த பொருளாதாரமும் மிக முதன்மையான ஒன்றாகும். திருகோணமலையில் 23,975 கடற் தொழிலில் ஈடுபடும் குடும்பங்கள் உள்ளன. கிழக்கு மாகாணத்தில் 67,355 கடற் தொழிலில் ஈடுபடும் குடும்பங்கள் உள்ளன.

இந்த அரசால் முன்வைக்கப்பட்டுள்ள பாதீட்டில் கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சுக்கு 6,213 மில்லியன் ரூபா மீண்டெழும் செலவுக்காகவும் 5,227 மில்லியன்ரூபாமூலதனசெலவுக்காகவும் மொத்தமாக 11,440 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 428 மில்லியன் ரூபா கூடுதலானது ஆகும். இது வரவேற்கதக்க விடயமாகும்.

மீண்டெழும் செலவுக்காக 2024 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியை விட 2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு 2,580 மில்லியன்ரூபாவல் அதிகரிக்கப்பட்டுள்ள பொழுதிலும் மூலதன நிதி ஒதுக்கீடானது இந்த ஆண்டு பாதீட்டில் 2,152 மில்லியன் ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இது பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற விடயம் அல்ல.

இந்த அமைச்சுக்கான மொத்த ஒதுக்கீடு பாதீட்டில் 0.3 வீதமாகக் காணப்படுவது கவலை தரும் விடயமாகும். மேலும் மூலதன ஒதுக்கீடு 0.12 வீதமாகக் காணப்படுவது அதனைவிட கவலை தரும் விடயமாகும். இந்த விடயத்தில் கடற்றொழில் அமைச்சரும் நிதி அமைச்சரும் தமது பார்வையை செலுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

மீன்பிடித்துறை, இன்று எதிர்நோக்கும் பெரும் சிக்கல்களாக முதலாவது இந்திய விசைப் படகுகள் எல்லை தாண்டி நமது நாட்டின் கடல் வளங்களை அள்ளிச் செல்வது , இரண்டாவது சட்டத்துக்கு விரோதமான முறையில் டைனமைட் பாவித்து மீன் பிடிப்பது, மூன்றாவது தங்கூஸ் வலைகளை பயன்படுத்துவது, நான்காவது வர்ணநிற(அழகு) மீன்களைப் பிடிப்பது முதலியன காணப்படுகின்றன.

கடற்தொழிலாளர் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சிக்கல், சுருக்கு வலையில் மீன் பிடிப்பதாகும். இதன் காரணமாக கடல் வளம் வரம்பை மீறிச் சுரண்டப் படுவதோடு 100 ஏழை மீனவர் பிடிக்கும் மீன்களை ஒரே ஒரு பெரும் முதலாளியின் சுருக்கு வலைப் படகு பிடிக்கின்றது.

சுருக்கு வலை பயன்படுத்தி மீன் பிடிப்பதற்காகஅரசுசிலவரன்முறைகளுடன் ஒப்புதல் கொடுத்துள்ளது. ஆனால் அரசு விதித்த வரன்முறைகள் மற்றும் விதிமுறைகளைசுருக்குவலைபயன்படுத்தி மீன்பிடிப்பவர்கள் பின்பற்றுவதில்லை. அவர்கள் ஆழ்கடலில் மட்டுமன்றி கரையை அண்டிய பகுதிகளிலும் சிறிய மீன்களை கூட அள்ளி விடுகிறார்கள்.

இதன் காரணமாக இச்சிறிய மீன்களை உணவாக கொள்ளும் பெரிய மீன்களுக்கு உணவு இல்லாமல் கடற் பரப்பில் உணவுச் சங்கிலியில் சமநிலை அற்ற தன்மை ஏற்படுகின்றது. இது சுற்றுச்சூழலை பாதிக்கும் ஒரு விடயமாகும். எனவே, இத்தகைய சுருக்கு வலை மீன்பிடி முறையினை முழுமையாக தடைசெய்ய அரசு ஆவன செய்ய வேண்டும்.

கடலோரப் பாதுகாப்பு படையினரால் இந்த சுருக்கு வலை மீன்பிடியை தடுக்க முடியாமல் இருப்பதால் கடலோர பாதுகாப்பு படையினர் மட்டுமன்றி ஓர் இணைந்த குழு ஒன்றை உருவாக்கி இந்த விடயங்களை கண்காணிக்க வேண்டும்.

கடற்தொழில் மீன்பிடிப்பாளர் போன்றே நன்னீர் மீன்பிடிப்பாளரும் பல்வேறுசிக்கல்களைஎதிர்கொள்கின்றனர்.

எடுத்துக்காட்டாக, திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் அடங்கும் கும்புறுப்பிட்டி கிழக்கு கிராம சேவை பிரிவில் அமைந்துள்ள றைகம் உப்பளத்தை 2009 ஆம் ஆண்டு அமைத்த பொழுது உப்பளத்துக்கு 456 ஏக்கரும் தொழிற்சாலைக்கு 26 ஏக்கரும் ஆக மொத்தம் 482 ஏக்கர் ஒதுக்கப்பட்டது. இப்பொழுது அந்த நிறுவனம் அதனுடன் இணைந்ததாக 1806 ஏக்கர் நிலத்தை பிடித்து வைத்துள்ளது.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# மீனவர்களுக்காக...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

இதனால் 240 நன்னீர் மீன்பிடிக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து நிற்கின்றன.

றைகம் நிறுவனம் தொடங்கும் பொழுது இந்த நன்னீர் மீன்பிடியாளருக்கு உறுதியளித்தவாறு வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை, மீன்பிடி படகுகளுக்கான இறங்குதுறை அமைத்து கொடுக்கப்படவில்லை. மீனவ சங்கங்களுக்கு ஆண்டுதோறும் வழங்குவதாக கூறிய ஒரு மில்லியன் ரூபா பணமும் வழங்கப்படவில்லை.

இந்த விடயத்தில் அரசு தலையிட்டு நன்னீர் மீனவர்களின் நலன்களை பாதுகாக்க ஆவன செய்ய வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன்.

மாகாண சபையின் கீழ் இயங்கும் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மீனவர்களின் நலன்களை நீண்ட காலமாகப் பேணி வருகின்றன. இந்த கூட்டுறவு சங்கங்களுக்கு மாற்றாக நடுவண் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கிராமிய மீனவர் அமைப்பு என்னும் அமைப்பை உருவாக்குவதை உடனே நிறுத்த வேண்டும்.

மாகாண சபை அதிகாரத்துக்கு உட்பட்டு ஒவ்வொரு மீனவக் கிராமங்களில் இருந்தும் இயங்கி வரும் மீனவ கூட்டுறவு சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கான அபிவிருத்திச் செயன்முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் அனைத்து மாகாண மட்டங்களிலும் மீனவர்களின் தேவைகள் எளிதாக நிறைவு செய்யப்படும்.

மீன்பிடித் துறையில் முதன்மையான ஒரு கூ றாக மீன்களை பதப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் காணப்படுகிறது. மீனவர்களுக்கு இதற்கான தகுந்த பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். மேலும் மீன்களைப் பாதுகாக்கும் பொருட்டு பயன்படுத்தப்படும் ஐஸ் கட்டிகள் பெரும்பாலும் தனியார் தொழிற்சாலைகளில் இருந்து பெறப்படுகின்றன . இந்த ஐஸ் கட்டிகள் தகுந்த தரத்தை கொண்டிருப்பதில்லை என்பதோடு விலையும் அதிகமாக உள்ளது.

இதனைத் தடுக்கும் பொருட்டு அரசு, ஐஸ் கட்டி தொழிற்சாலைகளை நிறுவித் தகுந்த தரம் மற்றும் நியாய விலையில் மீனவர்களுக்கு அவை கிடைக்க வழி செய்ய வேண்டும். இதன் மூலம் அரசுக்கும் வருமானம் கிடைக்கும்.

மேலும் கடல் வளங்களை பெறுமதி கூட்டுவதற்கான நடைமுறைகள் சார்ந்த ஒதுக்கீடுகள் எதுவும் இந்த பாதீட்டில் மேற்கொள்ளப்படவில்லை.

ஒலுவில் பகுதியில் கட்டப்பட்டு வரும் மீன்பிடி துறைமுகமானது பல ஆண்டுகளாக முடிவுறாத நிலையில் உள்ளது. இதனை விரைவாக மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர ஆவன செய்ய வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மீனவர்களில் பெரும்பான்மையோர் நவீன மீன்பிடி முறைகள் எதனையும் பின்பற்றுவதில்லை. காலையில் சிறிய படகுகளில் கடலுக்குச் சென்று மாலை திரும்பி வருகின்ற அன்றாட வருவாய்க்கான தொழில் செய்பவர்களாகவே காணப்படுகின்றனர்.

இம் மீனவர்கள் பன்னாள் மீன்பிடிப் படகுகளை பயன்படுத்தி மீன் பிடிப்பதில்லை என்பதோடு அதற்கான தொழில்நுட்ப அறிவோ முதலீட்டு வசதிகளோ அவர்களிடம் இல்லை. இதனால் இம்மீனவர்களது வாழ்க்கைத் தரம் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளது. இதனை மேம்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

திருகோணமலையில் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் அடிக்கடி காணாமல் போகின்றனர். அப்படி துன்பப் பட்டு போராடிப் பிடித்த மீன்களுக்கு சரியான விலையும் கிடைப்பதில்லை.

பெரும்பாலும் இடைத் தரகர்களே இலாபம் ஈட்டுகின்றனர்.

இதற்கானதீர்வாக, ஏழைமீனவர்களுக்குமீன்பிடி படகுகள் மற்றும் பன்னாள் மீன்பிடிப் படகுகள் கொள்வனவு செய்வதற்கு மானியத்துடன் கூடிய கடன் கொடுக்கும் திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மேலும் பன்னாள் மீன்பிடிப் படகுத் துறைகள், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இலங்கைத்துறை முகத்துவாரம், சம்பூர், சல்லி மற்றும் நாவற்சோலை முதலிய மீன்பிடி கிராமங்களில் நிறுவப்பட வேண்டும் என்பதோடு, பன்னாள் மீன்பிடி படகுகளை பயன் படுத்துவத்துவதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். இதனால் கடற் தொழிலையும் மீனவர் பொருண்மியத்தையும் மேம்படுத்த முடியும், அத்தோடு கடலில் காணாமற் போவோரின் எண்ணிக்கையையும் குறைக்கலாம்.

திருகோணமலை மாவட்டத்தில் வாழும் கடற் தொழிளார்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது. எனவே இவர்களுக்கு தனியான மீனவர் வீடமைப்பு திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும், அதற்கான நிதியை அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என வேண்டிக் ெ காள்கிறேன்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்குவதைப் போல மீனவர்களுக்கு மானிய விலையில் எரிபொருள் வழங்குவது மீன்பிடியைக் கூட்ட உதவும். எனவே இவர்களுக்கு மானிய விலையில் எரிபொருள் வழங்க ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

திருகோணமலை மாவட்டத்தில் 64,957 ஏக்கர் நீர்ப் பரப்பை கொண்ட நன்னீர் மீன் வளர்க்க கூடிய 437 நீர்நிலைகள் உள்ளன. இவை அனைத்திலும் மீன் வளர்க்க மீனவர்களுக்கு இலவசமாக மீன் குஞ்சுகள் வழங்கி ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட வேண்டும்.

முற்கூறிய வழிமுறைகள் மூலம் இப்பொழுது திருகோணமலை மாவட்டம் உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தில் பிடிக்கப்படும் மீனின் அளவை பன்மடங்காக அதிகரிக்க முடியும் எனக்கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன். - என்றார்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்


4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# திருமறைக் கலாமன்ற மகளிர் தினம் இளவாலையில் நாளை

யாழ்ப்பாணம்,இளவாலை திருமறைக் கலாமன்றங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மகளிர் தின நிகழ்வுகள் நாளை (சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு இளவாலைதிருமறைக்கலாமன்றகலைத்துது கலைக் களரியில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்த்துறை ஓய்வுநிலை விரிவுரையாளரும், எழுத்தாளருமான திருமதி ராணி சீதரனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ்த்துறை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கவிதா சந்திரகுமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

நிகழ்வுளாக நடனங்கள், பாடல்கள், கவிதை போன்றவற்றுடன் சிறப்பு நிகழ்வாக யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கும் 'செம்பாத்தாள்' கூத்துருவ நாடகமும் இடம்பெறும். ஒல்லாந்தர் காலத்தில் 1679 இல் வன்னிப் பிரதேசத்தில் தென்னமரவடி பிராந்தியத்திற்கு தலைமை வகித்த மரியசெம்பாத்தாவின் வரலாற்று அடிப்படைகளில் இருந்து உருவாக்கப்பட்ட படைப்பாக 'செம்பாத்தாள்' அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மருத்துவ சங்கப் பிரதிநிதிகள் குழு கிழக்கு ஆளுநரை சந்தித்து பேச்சு

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகரவுக்கும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்திற்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று புதன்கிழமை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி.ஏ.சி.என். தலங்கம, ஆளுநர் செயலக செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எச்.இ.எம்.டபிள்யூ.ஜி. திசாநாயக்க, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டி.ஜி.எம். கொஸ்டா மற்றும் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

அதன்படி, வைத்தியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டதுடன் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஆளுநர் இதன் போது கூறினார்.

# திருகோணமலை நகரப் பகுதியில் கட்டாக்காலி மாடுகள் அட்டகாசம்

(ஹலால்தீன் )

திருகோணமலை நகர சபைக்கு உட்பட்ட என்.சி.பிரதான வீதியில் கட்டாகாலி மாடுகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதி ஊடான போக்குவரத்து தடைப்படுவதோடு, பெரும் அசௌங்கரியங்களுக்கு உள்ளாக்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை நகரத்தின் மிக முக்கியமான வீதியாக காணப்படுவதோடு, மக்கள் நிறைந்த பகுதியாகவும் அந்த வீதி காணப்படுகின்றது.

நாளொன்றுக்கு சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இந்த வீதியை பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் முக்கிய வர்த்தக நிலையங்கள், வங்கிகள், அமைந்துள்ள இப்பகுதி கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தால் வியாபாரிகள் உட்பட பாதசாரிகளும், பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் சம்பந்தமாக சம்பந்துப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.











# அதிரடிபடையால் ஒருவர் கைது!

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை பழைய தபாலகம் அருகில் ஐஸ் போதைப் பொருளுடன் புதன்கிழமை இரவு 08.30 மணியளவில் கல்முனை விசேட அதிரடிப் படையினர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் கல்முனை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்கரை பள்ளி வீதி, கல்முனைக்குடி 02 ஐச் சேர்ந்த 30 வயதுடைய சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 1 கிராம் 450 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்ததுடன், சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதான சந்தேக நபர் இதற்கு முன்னரும் பல தடவைகள் விசேட அதிரடிப் படையினரினால் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மாஅதிபர் டி.ஜி.எஸ். சமந்த டி சில்வாவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை பதில் அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் குணசிறியின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு வலய உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் சம்பத் ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்நாயக்க மேற்பார்வையில் விசேட அதிரடிப்படை அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மற்றும் கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் – முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் பெரும் பிரச்சினைகள் உள்ளன

## அம்பாறை எம்.பி. உதுமாலெப்பை நாடாளுமன்றில் தெரிவிப்பு.

(ஹமீட்)

கடந்த 30 வருட காலமாக வட - கிழக்கில் நடைபெற்ற கொடூர யுத்தத்தில் வடக்கு - கிழக்கில் வாழ்ந்து வந்த மூவின மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பாரிய பிரச்சினைகளையும் எதிர் நோக்கினர். தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான பிரச்சினைகளை தமிழ்- முஸ்லிம் மதத்தவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் புத்திஜீவிகளும் ஒன்றிணைந்து பேச்சுகளை மேற்கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உள்ளோம் என பொது நிருவாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் மீதான குழுநிலை நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் உதுமாலெப்பை தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

கடந்த 30 வருட கால கொடூர யுத்த காலத்தில் சுதந்திரமாக பேசுவதற்கு உரிமை இல்லாதவர்களாக இருந்தோம். நாய்களை சுடுவது போன்று மனிதர்களை படுகொலை செய்தார்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது. ஆகவே நாடாளுமன்றத்தில் நான் ஒரு வீரனாக பேசுகிறேன் என்பதற்காக நீங்கள் எனது முஸ்லிம் சமூகத்திற்கு உதவி புரிய வேண்டாம்.

வட- கிழக்கில் வாழும் மூவின மக்களின் பிரச்சினைகளுக்காக சமூகங்களின் மக்கள் பிரதிநிதிகளையும், புத்திஜீவிகளையும் அழைத்து பேச்சுகளின் ஊடாக தீர்வு காண்பது எமது குறிக்கோளாகும். தேர்தல்களில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக தமிழ் மக்கள் மத்தியிலும் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் இனவாதம் பேசுவதை நாங்கள் வன்மையாக எச்சரிக்கிறோம்.

மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதால் மத்திய அரசாங்கம், நாடாளுமன்ற செயற்பாடுகளுக்கு அப்பால் நமது மக்களுக்கு பணி செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தும் செயற்பாடுகள் மாகாண சபைகளிடம் இருந்து வந்தன. இச்செயற்பாடுகள் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்ததால் பல ஆண்டு காலமாக மாகாண சபை தேர்தல்கள் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே விரைவில் மாகாண சபைகளின் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மாகாண சபைகள் அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது பிரதேசத்திற்கான தனியான உள்ளூராட்சி சபை வழங்கப்பட வேண்டும்என்றசாய்ந்தமருதுபிரதேச மக்களின் நீண்ட கால கோரிக்கை தொடர்ந்தும் ஏமாற்றப்படும் நிலை காணப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் கல்முனை சாந்தால் கேணி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் சாய்ந்தமருது பிரதேசத்திற்கான தனியான உள்ளூராட்சி சபை வழங்கப்படும் என தெரிவித்தார்.



5 வருடங்கள் ஆட்சியில் இருந்தபோதும் சாய்ந்தமருதுக்கானதனியானஉள்ளூராட்சிசபை வழங்கப்படாமல் ஏமாற்றப்பட்டது. கடந்த 2020 ஆம் ஆண்டு உள்நாட்டலுவல்கள் பொது நிருவாக அமைச்சர் ஜனக பண்டார தென்னங்கோனால் சாய்ந்தமருது பிரதேசத்திற்கான தனியான நகர சபை வர்தமானியில் வெளியிடப்பட்டது. அண்ணன் வழங்கிய அனுமதியை தம்பி ரத்து செய்தார். எனவே சாய்ந்தமருது மக்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று சாய்ந்தமருது நகர சபை தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானியை அமுல்படுத்தி சாய்ந்தமருது பிரதேச மக்களுக்கான தனியான நகர சபையை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந் துறை, சாய்ந்தமருது, காரைதீவு ,நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைக் குழு கூட்டங்கள் நடைபெறுகின்றன.

பொது நிருவாக அமைச்சின் சுற்று நிருபத்தின்படி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்கள் 2 1ஃ2 மணித்தியாலங்களில் நடத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி பிரதேசங்களில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைக் குழு கூட்டங்கள் 5 மணித்தியாலங்கள், 6 மணித்தியாலங்கள் நடைபெற்றது. இதனால் மக்கள்பிரதிநிதிகளும்திணைக்களத்தலைவர்களும் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

அக்கரைப்பற்று பிரதேச ஒருங்கிணைக் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாய அமைப்பின் தலைவர் ஒருவர் மயங்கி விழுந்துள்ளார்.எனவே பொது நிருவாக அமைச்சு இது தொடர்பான சுற்று நிரூபத்தை அமுல்படுத்த வேண்டும்.

அது மாத்திரமின்றி ஒவ்வொரு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் 10 பேரை அழைத்து வருகின்றார். அவர் ஒரு மணித்தியாலம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பேசுகின்றார். அவர் அழைத்து வந்த 10 பேரும் அவர் பேசும்போது கை அடித்து மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். இச்செயற்பாடானது பொதுநிருவாக அமைச்சின் செயற்பாடுகளுக்கும், ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் அவப்பெயரை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

புதிய சுற்று நிரூபத்தை உருவாக்கி சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ள 10 பேருக்கு அனுமதி வழங்க வேண்டும். இந்த விடயத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் நான் ஜனாதிபதியிடம் முறையிடுவேன் எனத் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

## ஆதரவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1/160 1/200 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

இத்துறையில் தாதியர்கள் மகத்தான சேவைகளை ஆற்றி வருகின்றனர். தாதியர்கள் பற்றாக்குறையும் கடுமையாக காணப்படுகிறது. தேசிய மக்கள் சக்தியின் கூட்டங்களுக்கு உத்தியோகபூர்வ ஆடையில் வந்து ஆதரவளித்த தாதியர்களை இவ்வாறு தான் நடத்துவதா?

இதுதான் நீங்கள் காட்டும் நன்றிக்கடனா? மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இலவசக் கல்வித் துறை ஊடாக வெளியேறிய பட்டத்தாரிகள் வேலையில்லாமல் இருப்பதால், இவர்களுக்கு வேலை வழங்கி புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள வேண்டும். ஏறக்குறைய 1800 ஆயுர்வேத பட்டதாரிகள் வேலையில்லாமல் உள்ளனர் ஒவ்வொரு ஆண்டும் வரையறுக்கப்பட்ட பயிற்சியை முடித்துவிட்டு சுமார் 200 பேர் வெளியேறி வரும் நேரத்தில், ஆயுர்வேத மருத்துவத் துறையில் சுமார் 600 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

எனவே இது குறித்தும் ஆராயுங்கள் 2023 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் மேற்கோள்ளப்பட்ட திருத்தங்களால் ஆயுர்வேத துறை பாதிக்கப்பட்டுள்ளது. ஆயுர்வேத மருந்துகளை பயிரிடுதல், தயாரித்தல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகம் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்கள், தொழில்முனைவோர், தொழிலதிபர்கள், வர்த்தக நிலையங்களை நடத்தி வருபவர்கள் கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

இதனால் நோயாளர்களும் அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளதால், இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்க வேண்டும். டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்களும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இவர்களினது சேவையினை நிரந்தரமாக்க வேண்டும். வைத்தியசாலை கனிஷ்ட ஊழியர்கள் பெரும் சேவையை ஆற்றி வருகின்றனர். மேலதிக நேர கொடுப்பனவு இவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. எனவே இந்த மேலதிக கொடுப்பனவை பெற்றுக் கொடுங்கள். குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு பயணச் செலவாக கிலோமீட்டருக்கு 2 ரூபா வழங்கப்படுகின்றது. குறைந்த வசதிகள் காணப்பட்டாலும்,

வெற்றிடங்கள் காணப்படுகின்றன. 937 பேர் இதில் புதிய நியமனங்களை எதிர்பார்த்துள்ளனர். மேலும் 1200 பேருக்கு பயிற்சி அளிக்கப்படுவதால், நோய் தடுப்பு துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து இத்தரப்பினரது பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்.

எனவே சுகாதாரமும் கல்வியும் மனித உரிமைகளாகும். அரசியலமைப்பில் உள்ள மனித உரிமைகள் அத்தியாயத்தில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. பொருளாதாரம், சமூகம், மதம், கலாசாரம், சுகாதாரம் போன்ற பிற துறைகளும் மனித உரிமைகளாகும். அதனால், சுகாதாரத் துறையை மனித உரிமையாக மாற்றுமாறு கோரிக்கை விடுக்கின்றேன். இதற்கு எதிர்க்கட்சி தமது முழு ஆதரவை பெற்றுத் தரும் என்றார்.

## ஆளும்தரப்புக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானமானது இலங்கைக்கு ஒரு முன் எச்சரிக்கை குறிகாட்டியாக இருக்கவேண்டும் என ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.-

வர்த்தகச் சுவர்கள் அமெரிக்காவிற்கான நமது அணுகலைத் தடுக்கும் முன், அவசர, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நமது மிகப்பெரிய ஏற்றுமதி சந்தை குறித்து ஆழமாகச் சிந்திக்கவேண்டும். வெளியுறவுக்கொள்கையில் அனுபவமின்மையைகாரணமாகக்காண்பித்து இதனை உதாசீனப்படுத்திவிடக்கூடாது.

இந்தச் சவாலை எதில்கொள்வதற்கு கோப் தலைவராக, நான் உதவத் தயாராக இருக்கிறேன் என அவர் தனது எக்ஸ் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஊடக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலமை பரிசில்கள் வழங்கப்படுமென ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தபால் திணைக்களத்தை நவீனமயப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தனியார் துறையின் பங்களிப்புடன் தபால் நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்படும். நாடளாவிய ரீதியில் புதிதாக 14 தபால் நிலையங்களை அமைப்பதற்கும், தபால் நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நுவரெலியா, கண்டி ஆகிய பகுதிகளில் உள்ள தபால் நிலையங்களின் பாரம்பரியம் பாதுகாக்கப்பட்டு அதனூடாக சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்யப்படும்.

ஊடகத்துறை மற்றும் ஊடகவியலாளர்களின் மேம்பாட்டுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2023/ 2024 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நடத்தப்படவிருந்த ஜனாதிபதி ஊடக விருந்து வழங்கல் விழா வெகுவிரைவில் நடத்தப்படும். ஊடகவியலாளர்களின் தொழிற்றுறைதிறனை மேம்படுத்த எதிர்வரும் அமைச்சு மட்டத்தில் விசேட திட்டங்கள் செயற்படுத்தப்படும். அத்துடன் ஊடகவியலாளர்களின் நலன்கருதி 100 புலமை பரிசில்கள் வழங்கப்படும்.

பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு ஊடகவியல் தொடர்பில் பயிற்சி வழங்கப்படும். அரச ஊடகங்களில் காணப்பட்ட அரசியல் அழுத்தங்கள் நீக்கப்பட்டுள்ளன. தற்போது அரச ஊடக நிறுவனங்கள் சுயாதீனமாக செயற்படுகின்றன - என்றார்.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தி பலவந்தமாக ஆட்சியை கொண்டு செல்பவர்களும் அல்ல. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் மக்கள் கோரிக்கை விடுத்தவுடன், அது ஜனநாயகத்துக்கு முரணான கோரிக்கையாக இருந்த போதிலும், அவர் ஆட்சியை ஒப்படைத்து விட்டுச் சென்றார்.

நாம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாட்டு மக்களுடன் அரசியலில் ஈடுபட்டவர்கள். நாம் என்றும் மக்களுடனேயே இருப்போம். ஒருபோதும் பொய் கூறி ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்க மாட்டோம். நாம் யார் என்பதை மக்கள் அறிவார்கள். மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எந்த சந்தர்ப்பத்திலும் எந்தவொரு தீர்மானமும் எம்மால் எடுக்கப்படவில்லை. நாம் நாட்டுக்கு துரோகமிழைக்கவுமில்லை.

எனவேதான் மக்கள் எமது கொள்கைகளை நம்புகின்றனர். தற்போதைய ஆளும்தரப்பு எம்மைப் போன்றவர்களை மாத்திரமின்றி, 97 வயதுடைய எனது பாட்டியின் கழுத்தையும் நெறிக்கின்றது. 10 ஆண்டுகளின் பின்னர் வாக்குமூலளிப்பதற்கு அழைப்பாணை விடுக்கப்படுகிறது. சில அரசியல் சக்திகள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் வங்குரோத்தடையும் போது இவ்வாறுதான் செயற்படும்.

பெண்கள் மீதான துன்புறுத்தல்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் உரையாற்றுபவர்கள் 97 வயது பாட்டியை காலையிலிருந்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இருத்தி, பகலுணவைக்கூட வழங்காமல் வாக்குமூலம் பெறுகின்றனர். எவ்வாறிருப்பினும் நீதிமன்ற சுயாதீனத்தன்மை மீது எமக்கு நம்பிக்கையிருக்கிறது. நாமல் ராஜபக்சவின் கழுத்தை நெறிப்பதாலேயோ, எனது பாட்டியை குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைப்பதாலேயோ எமது பயணத்தை தடுக்க முடியாது -என்றார்.

## நிகழ்நிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் சுகாதாரத்துறை அமைச்சில் அதிகளவான மோசடிகள் இடம்பெற்றன. முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சருக்கு எதிராக நாங்கள் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்தோம். அந்த நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களித்தவர்கள் இன்று சபையில் உள்ளார்கள். அவர்கள் மக்களின் சுகாதாரம் பற்றி பேசுகிறார்கள்.

மருந்து இறக்குமதியில் மோசடி செய்து நோயாளர்களின் பார்வையை பறித்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுங்கள். 2004 ஆம் ஆண்டு சுனாமி நிதி மோசடி தொடர்பில் ராஜபக்சர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போது அவர்களை நீங்கள்தான் ஆட்சிக்கு கொண்டு வந்தீர்கள். ஆகவே 75 ஆண்டு காலத்தை விமர்சித்துக் கொண்டிருக்காமல், ஊழல்வாதிகளை தண்டியுங்கள்.

முஸ்லிம் மக்களை பழிவாங்கும் நோக்கில்தான் கொவிட் தொற்று காலத்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச முஸ்லிம் ஜனாஸாக்களை தகனம் செய்தார். அறிவியல் காரணிகள் ஏதுமில்லாமல்தான் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. மலட்டு கொத்து, மலட்டு ஆடை உருவாக்கத்தை போன்றே இதுவும் ஒரு வெறுப்பின் வெளிப்பாடாகும். ஆகவே முஸ்லிம் ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யும் தீர்மானத்துக்கு உடந்தையாகவிருந்தவர்களின் பெயர் விவரங்களை சுகாதார அமைச்சு வெளியிட வேண்டும்.

ஓர் அரச நிறுவனம்கூட இலாபமடைவதில்லை. இந்த நட்டத்தை ஆளும்தரப்பால் சுமக்க முடியுமா? போட்டித் தன்மையான சந்தைக்குள் பிரவேசிக்கும் நோக்கம் அரச ஊடகங்களுக்கு கிடையாதா, பங்குகளை அதிகரித்துக் கொள்வதற்கு அவதானம் செலுத்தவில்லை. அரச ஊடகம் ஒன்று கடந்த காலங்களை காட்டிலும் தற்போது எதிர்க்கட்சிகளுக்கு சேறு பூசுவதற்கு அதிக ஈடுபாட்டுடன் செயற்படுகிறது. பெலவத்தை அலுவலகத்தில் இருந்து நகல் அனுப்பப்படுகிறதா என்பதை நாங்கள் அறியவில்லை. பெரும்பாலான அரச நிறுவனங்கள் வற்வரி செலுத்துவதில்லை. ஆகவே இவ்விடயத்தில் அவதானம் செலுத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆளும்தரப்பையும் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் முடக்குவதற்காகவே நிகழ்நிலை காப்புச் சட்டத்தை கொண்டு வந்தது. இந்தச் சட்டத்தை திருத்தம் செய்வதாக ஆளும்தரப்புக் குறிப்பிடுகிறது. அனைத்து தரப்பினரது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை பெற்று இந்த திருத்தம் கொண்டு வரும் வரை நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் செயற்படுத்தலை இடைநிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். நிகழ்நிலை காப்புச் சட்டத்தால் தெரிவு செய்யப்பட்ட ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் நெருக்கடிக்குள்ளாக்கப்படலாம். யூடியூப் செயலி ஊடாக ஊடக நடவடிக்கைகளில் ஈடுபடும் ஊடகவியலாளர்களுக்கு விசேட அங்கீகாரம் வழங்க வேண்டும் - என்றார்.

## விவசாய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் விவசாயத் துறையில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையில் காலநிலைக்கு உகந்த திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு தாம் செயற்பட்டு வருவதாகவும் கனேடிய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு விவசாய அபிவிருத்திக்கு சிறப்பான பங்களிப்பு வழங்கப்படும் எனவும் கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் மேலும் கூறியுள்ளார்.




காலைக்கதிர் Kalaikkathir

# போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் இருவர் கைது




வவுனியாவில் மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்த போதை மாத்திரைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, வேப்பங்குளும் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து போதை மாத்திரை வியாபாரம் செய்யப்படுவதாகவவுனியாமாவட்ட குற்றவிசாரணைப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜய சோமமுனியின் அறிவுறுத்தலின் கீழ் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலக அவர்களின் தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் ராஜகுரு, பொலிஸ் சார்ஜன்டுகளான திசாநாயக்க, அசங்க மற்றும் பொலிஸ் கொன்ஸ்தாபில்களான சிந்நக்க, விதுசன், பொலிஸ் சாரதி திசாநாயக்க உள்ளடங்கிய பொலிஸ் குழுவினர் சந்தேகத்திற்கிடமான குறித்த வீட்டை சுற்றி வளைத்து சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 180 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த 20 மற்றும் 29 வயதுடைய இரு இளைஞர்களையும் கைது செய்யப்பட்டனர்.

முதற்கட்ட விசாரணைகளில் குறித்த போதை மாத்திரைகள் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர். 100

# கலாநேத்திரா விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

**வவுனியா பிரதேசசெயலகத்தின் கலாநேத்ரா விருதுக்கு விண்ணப்பம் கோரப்பட்டள்ளது.**

வவுனியா பிரதேசசெயலகமும், கலாசார பேரவையும் இணைந்து வழங்கும் 'கலாநேத்ரா' 2025 விருதிற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர் வவுனியா பிரதேச செயலக பிரிவை நிரந்தர வதிவிடமாக கொண்டிருப்பதுடன், 25 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்.

துறைசார்ந்த ஆவணப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தேவை ஏற்படும் பட்சத்தில் விண்ணப்பதாரி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார். கடந்த காலங்களில் பிரதேச விருது பெற்ற கலைஞர்கள் மீளவும் விண்ணப்பிக்க முடியாது. குறித்த துறையில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் விருது தெரிவிற்குள் உள்வாங்கப்படுவர்.

விண்ணப்பங்களை 18.03.2025 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

இம்முறை சிறுகதை, கவிதை, நாவல், கட்டுரை, நாடக எழுத்துரு, இசை (சாஸ்திரிய இசை, பண்ணிசை, ஆக்க இசை, மெல்லிசை), மரபுக்கலை (நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு), நாடக ஆற்றுகை, சிற்பம், ஓவியம், பரதம், வாத்திய இசை (வயலின், வீணை, புல்லாங்குழல், ஆர்மோனியம், மிருதங்கம், தபேலா, கடம், முகர்சிங், ஓர்கன் போன்றன), குறும்படம், இயல் (பேச்சு, விவாதம், பட்டிமன்றம், வழக்காடுமன்றம்), அறிவிப்பு, மரபு இசை (தவில், நாதஸ்வரம், பறை, உடுக்கு), ஊடகம் போன்ன துறைகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

100



# மாற்றுத் திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கல்

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு தொகை உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், சமூக சேவை உத்தியோகத்தர் அ.அகமட் சபீர் , நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் நளிர், சமூக சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , சமூக சேவைப்பிரிவின் பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.








காலைக்கதிர் Kalaikkathir

# விஞ்ஞான பாட செயலமர்வு

விஜயாலயன் அறக்கட்டளையின் அனுசரனையில் பொகவந்தலாவையில் அமைந்துள்ள கெம்பியன் த.வி, லொயிலோன் த.வி, பெட்ரசோ த.வி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 105 மாணவர்களுக்கான விஞ்ஞான பாடத்திற்கான பரீட்சை நோக்கு செயலமர்வு சனி, ஞாயிறுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வளவாளர்களாக திருகோணமலையிலிருந்து வருகை தந்த முன்னாள் அதிபர் பு.முரளிதரன் ,திருமதி நந்தினி முரளிதரன் ஆகியோர் சிறப்பாக செயலாற்றினார்கள்.

விஜயாலயன் அறக்கட்டளையானது மலையகம், திருமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களின் கற்றல் தேவைக்குரிய புலமைப் பரிசில்களை தொடர்ந்து வழங்கி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.





# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு

(ஹலால்தீன் )

கிண்ணியா நகர சபையும் கிண்ணியா பொது நூலகமும் இணைந்து தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்துப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நடத்துவ சம்பந்தமான ஆலோசனை கூட்டம் கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

கிண்ணியா நகர சபை செயலாளர் எம்.கே.எம். அனிஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நூலகப் பொறுப்பாளர் முஹம்மது மசூத், வாசக வட்ட செயலாளர், உறுப்பினர்கள், கவிஞர்கள், இலக்கியவாதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இம்மாதம் இறுதிப் பகுதிக்குள் விழா ஏற்பாடு செய்து, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் சான்றிதழும் வழங்குவதாக தீர்மானம் எடுக்கப்பட்டது.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.03.2025இல் வெளியிடப்பெற்றது